கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

**எம்.சி.ஓ.பி. 124-2021**

மனுதாரா் தரப்பு 1வது சாட்சி ராணி என்பவரின் வாக்குமூலம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சுமதி, மொழிபெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | |
|---|---|
| பெயர் : ராணி | சாதி : |
| கணவர் பெயர் : பழனிசாமி | சமயம் : இந்து |
| கிராமம் : ஸ்ரீவில்லிபுத்தூர் | தொழில் : கூலி |
| தாலுகா : ஸ்ரீவில்லிபுத்தூர் | வயது : 36 |

நாள் : 03.02.2023

ம.சா.1

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 1ம்மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியதை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. 08.07.2021ம் தேதியிட்ட விருதுநகர் கிழக்கு காவல் நிலையக் குற்ற எண்.105-2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1**. இறந்து போன எனது மகன் பார்த்திபனின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் **ம.சா.ஆ.2**. எனது மகனின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்த நகல் **ம.சா.ஆ.3**. எனது மகனின் வாரிசு சான்றிதழ் **ம.சா.ஆ.4**. எனது ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.5.** 2ம்மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.6.** எனது மகன் பார்த்திபனின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.7**. மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

**எம்.சி.ஓ.பி. 124-2021**

நாள்: 30.06.2023

ம.சா.1

1ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை: எனது மகன் 1ம்எதிர்மனுதாரர் கோவிந்தராஜன் கிரேனில் வேலை பார்த்தார். ஒன்றரை வருடமாக வேலை பார்த்தார். மாதம் ஒன்றிற்கு ரூ.20,000- சம்பளம் வாங்கினார். சம்பவத்தின் போது நான் விபத்தை பார்க்கவில்லை. வாகன விபத்து 3ம்எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனரால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் இழப்பீடு 4ம்எதிர்மனுதாரர் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 3பேரும் சேர்ந்து தான் கொடுக்க வேண்டும். 1ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**: எனது மகன் 1ம்எதிர்மனுதாரரின் கிரேனின் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாக தான் கேள்விப்பட்டேன். 3ம்எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் கிரேனை இயக்கும் போது மின்சாரம் பாய்ந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கை படி 3ம்எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது. 1ம்எதிர்மனுதாரரும் வாகனத்தின் கவனக்குறைவால் விபத்து ஏற்படாததால் 2ம்எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்த போது ஓட்டுனருக்கு மட்டும் தான் பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளதால் எனக்கு இழப்பீடு வழங்க 2ம்எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**4ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**: 5ம் எதிர்மனுதாரர் எனது கணவர். அவர் ஆறு ஏழு ஆண்டுகளாக என்னை பிரிந்து வாழ்கிறார் என்றால் சரிதான். எனக்கும் அவருக்கும் விவாகரத்து ஆகவில்லை. எனது மகன் ஐடிஐ படித்ததாகவும், கிரேன் உதவியாளராக பணி செய்ததாகவும் ரூ.20,800- மாதம் சம்பளம் வாங்கியதாகவும், அவரது வயது 23 என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை

என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கைக்கான புகார் நான் தான் கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையில் இரண்டு கிரேன்கள் மூலமாக மிஷினை தூக்கி கொண்டு செல்லும் போது திடீரென்று கீழே விழுந்து என் மகன் மயங்கிவிழுந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் என்ன காரணத்தால் இறந்தார் என்பதற்கான இரசாயண பரிசோதனை அறிக்கை கிடைத்தால் தான் சொல்லமுடியும் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. நான் மனுவில் இரண்டு வண்டிகளின் ஓட்டுனர்கள் தான் காரணம் என்று சொல்லியுள்ளேன் என்றால் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். 3ம்எதிர்மனுதாரருக்கு சொந்தமான கிரேன் விபத்து சமயத்தில் 4ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த தேதியில் 3ம்எதிர்மனுதாரருக்கும், 4ம்எதிர்மனுதாரருக்கும் ஒப்பந்த சார்புரோ இல்லை என்றால் சரியல்ல. உரிய காப்பீடு இல்லாததால் 3ம்எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் தான் விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்யும் பட்சத்தில் 3ம்எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் இறந்ததால் எனக்கு எந்த வருமான இழப்பீடும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.